நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 733 /2025

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | நிர்மலா |
| தந்தை / கணவர் பெயர் | : | வீரிசெட்டி |
| கிராமம் | : | நங்கவள்ளி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 54 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 20–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.48AM

1. நான் தற்போது நங்கவள்ளியில் குடியிருக்கிறேன். நான் கைத்தறி வேலை செய்கிறேன். இந்த விபத்தில் அடிப்பட்டவர் எனது கணவர் ஆவார். சுமார் 8 மாதங்களுக்கு முன்பு மாலை 5.00 மணி அளவில் எனது கணவர் வீட்டில் இருந்து TVS வண்டியில் பால் வாங்கி கொண்டு திரும்பி வரும்போது பல்சர்

வண்டியை ஓட்டி வந்தவர் எனது கணவர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடம் சென்ற பார்த்தபோது எனது கணவரை ஆம்புலன்ஸில் படுக்க வைத்திருந்தார்கள்.

2. எனது கணவரை குஞ்சாண்டியூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு வந்து சேர்த்தேன். எனது கணவர் மயக்க நிலையில் இருந்ததால் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ( **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** விபத்தை ஏற்படுத்தியவரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய வண்டி எண் எனக்கு தெரியாது. எனது கணவர் ஓட்டி வண்டியின் எண்ணும் எனக்கு தெரியாது. எனது கணவரின் வயது 64 ஆகும். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது கணவர் விபத்தின்போது ஓட்டிய வாகனத்திற்கு காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.
2. நான் சொன்னவாறு விபத்து நடைபெறவில்லை என்றாலும், எதிரியின் வாகனம் எனது கணவரின் மீது மோதவில்லை என்றாலும், அவராக வாகனத்தை ஓட்டி மண் சறுக்கி கிழே விழுந்து காயத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றாலும் வாய்ப்புள்ளது. இந்த வழக்கு இருதரப்பினரும் சமாதானம் செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-12.01PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 733 /2025**

**P.W. 2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வீரிசெட்டி |
| தந்தை / கணவர் பெயர் | : | தர்மலிங்கம் |
| கிராமம் | : | நங்கவள்ளி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 2** |
| வயது | : | 64 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 20–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.02PM.

1. நான் தற்போது நங்கவள்ளியில் குடியிருக்கிறேன். நான் கைத்தறி தொழில் செய்து வருகிறேன். சுமார் 8 மாதங்களுக்கு முன்பு வீட்டில் இருந்து பால் வாங்கி வருவதற்காக TVS வண்டியில் சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வரும்போது கீழே விழுந்து மயக்கம் அடைந்துவிட்டேன். மயக்கம் தெளிந்து பார்த்தபோது

நான் மருத்துவமனையில் இருந்தேன். மற்றபடிஎனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. 02.06.2025ம் தேதி மாலை 5.00 மணி அளவில் நான் TN 27 T 1275 TVS 50 இருசக்கர வாகனத்தில் கைலாஸ் கல்லூரி அருகே பேக்கரியில் பால் வாங்கி கொண்டு தாரமங்கலம் டு நங்கவள்ளி ரோட்டில் வலது பக்கமாக சாலையை கடக்க முயன்றபோது எனக்கு பின்னால் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் TN 93 J 0946 Splender+ இரு சக்கர வாகனத்தை ஆஜர் எதிரி ஓட்டி வந்து என் மீது மோதினார் என்றால் எனக்கு நினைவு இல்லை. இந்த விபத்தில் எனக்கு தலையின் முன் மற்றம் பின்பக்கம் பலத்த காயம் ஏற்பட்டது என்றும், போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரிதான் விபத்துக்கு காரணம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியுடன் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.
2. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.10PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**